# பெப்ரவரி – 04 – திங்கள்

**தூய அருளானந்தர்**

**“உமக்கு அஞ்சி நடப்போர்க்கு நீர் வைத்திருக்கும் நன்மை எத்துணை பெரிது.” (தி.பா. 31:19)**

## முதல் வாசகம் : எபிரேயர் 11 : 32 – 40

சகோதர, சகோதரிகளே! இன்னும் கூறவேண்டுமா? கிதியோன், பாராக்கு, சிம்சோன், இப்தாகு தாவீது, சாமுவேல் ஆகியோர்பற்றியும், இறைவாக்கினர் பற்றியும் எடுத்துரைக்க எனக்கு நேரமில்லை. நம்பிக்கையினாலேயே இவர்கள் அரசுகளை வென்றார்கள் நேர்மையாகச் செயல்பட்டார்கள் கடவுள் வாக்களித்தவற்றைப் பெற்றார்கள் சிங்கங்களின் வாய்களை அடைத்தார்கள். தீயின் கொடுமையைத் தணித்தார்கள் வாள் முனைக்குத் தப்பினார்கள் வலுவற்றராயிருந்தும் வலிமை பெற்றார்கள் போரில் வீரம் காட்டினார்கள் மாற்றார் படைகளை முறியடித்தார்கள். பெண்கள் இறந்த தம் உறவினரை உயிர்த்தெழுந்தவராய்ப் பெற்றுக்கொண்டார்கள். உயிர்த்தெழுந்து சிறப்புறும் பொருட்டு, சிலர் விடுதலை பெற மறுத்து வதையுண்டு மடிந்தனர். வேறு சிலர் ஏளனங்களுக்கும் கசையடிகளுக்கும் ஆளாயினர் விலங்கிடப்பட்டுச் சிறையில்கூட அடைக்கப்பட்டனர். சிலர் கல்லெறிபட்டனர் இரண்டாக அறுக்கப்பட்டனர் வாளுக்கு இரையாகி மடிந்தனர் செம்மறியின் தோலையும் வெள்ளாட்டுத் தோலையும் போர்த்துக்கொண்டு அலைந்து திரிந்தனர் வறுமையுற்று வாடினர் துன்புறுத்தப்பட்டனர் கொடுமைக்கு உள்ளாயினர். அவர்களை ஏற்க இவ்வுலகுக்குத் தகுதியில்லாமல் போயிற்று. மலைகளிலும் குகைகளிலும் நிலவெடிப்புகளிலும் பாலை வெளிகளிலும் அவர்கள் அலைந்து திரிந்தார்கள். இவர்கள் அனைவரும் தம் நம்பிக்கையினாலே நற்சான்று பெற்றார்கள். ஆயினும் கடவுள் வாக்களித்ததை அவர்கள் பெறவில்லை. ஏனெனில், நம்மோடு இணைந்துதான் அவர்கள் நிறைவு பெற முடியும் என்பதைக் கடவுள் கருத்தில்கொண்டு நமக்காகச் சிறந்த திட்டம் ஒன்றை வகுத்திருந்தார்.

**பதில்பாடல் :** நமது மீட்பின் ஆண்டவரைப் புகழ்ந்து பாடுங்கள்

## நற்செய்தி : மாற்கு 5 : 1 - 20

அக்காலத்தில் இயேசு தம் சீடர்களுடன் கடலுக்கு அக்கரையிலிருந்த கெரசேனர் பகுதிக்கு வந்தார்கள். இயேசு படகைவிட்டு இறங்கிய உடனே தீய ஆவி பிடித்த ஒருவர் கல்லறைகளிலிருந்து அவருக்கு எதிரே வந்தார். கல்லறைகளே அம்மனிதரின் உறைவிடம். அவரை எவராலும் ஒருபொழுதும் சங்கிலியால்கூடக் கட்டிவைக்க முடியவில்லை. ஏனெனில், அவரைப் பலமுறை விலங்குகளாலும் சங்கிலிகளாலும் கட்டியிருந்தும் அவர் சங்கிலிகளை உடைத்து விலங்குகளைத் தகர்த்து எறிந்தார். எவராலும் அவரை அடக்க இயலவில்லை. அவர் இரவு பகலாய் எந்நேரமும் கல்லறைகளிலும் மலைகளிலும் கூச்சலிட்டுக் கொண்டிருந்தார் தம்மையே கற்களால் காயப்படுத்தி வந்தார். அவர் தொலையிலிருந்து இயேசுவைக் கண்டு ஓடிவந்து அவரைப் பணிந்து, ”இயேசுவே, உன்னத கடவுளின் மகனே, உமக்கு இங்கு என்ன வேலை? கடவுள் மேல் ஆணை! என்னை வதைக்க வேண்டாம்” என்று உரத்த குரலில் கத்தினார். 8 ஏனெனில் இயேசு அவரிடம், ”தீய ஆவியே, இந்த மனிதரை விட்டுப் போ” என்று சொல்லியிருந்தார். அவர் அம்மனிதரிடம், ”உம் பெயர் என்ன?” என்று கேட்க அவர், ”என் பெயர் ”இலேகியோன்”, ஏனெனில் நாங்கள் பலர்” என்று சொல்லி, அந்தப் பகுதியிலிருந்து தங்களை அனுப்பிவிட வேண்டாமென்று அவரை வருந்தி வேண்டினார். அங்கே மலைப்பகுதியில் பன்றிகள் பெருங் கூட்டமாய் மேய்ந்து கொண்டிருந்தன. ”நாங்கள் அப்பன்றிகளுக்குள் புகும்படி எங்களை அங்கே அனுப்பிவிடும்” என்று தீய ஆவிகள் அவரை வேண்டின. அவரும் அவற்றுக்கு அனுமதி கொடுத்தார். பின் தீய ஆவிகள் வெளியேறிப் பன்றிகளுக்குள் புகுந்தன. ஏறக்குறைய இரண்டாயிரம் பன்றிகள் அடங்கிய அந்தக் கூட்டம் செங்குத்துப் பாறையிலிருந்து கடலில் பாய்ந்து வீழ்ந்து மூழ்கியது. பன்றிகளை மேய்த்துக் கொண்டிருந்தவர்களோ ஓடிப்போய் நகரிலும் நாட்டுப்புறத்திலும் இதை அறிவித்தார்கள். நடந்தது என்னவென்று பார்க்க மக்கள் வந்தனர். அவர்கள் இயேசுவிடம் வந்தபோது, பேய் பிடித்திருந்தவர், அதாவது இலேகியோன் பிடித்திருந்த அவர், ஆடையணிந்து அறிவுத் தெளிவுடன் அமர்ந்திருப்பதைக் கண்டு அச்சமுற்றார்கள். நடந்ததைப் பார்த்தவர்கள் பேய் பிடித்தவருக்கும் பன்றிகளுக்கும் நேரிட்டதை அவர்களுக்கு எடுத்துரைத்தார்கள். அப்பொழுது அவர்கள் தங்கள் பகுதியை விட்டுப் போய்விடுமாறு இயேசுவை வேண்டிக்கொண்டார்கள். அவர் படகில் ஏறியதும் பேய் பிடித்திருந்தவர் தாமும் அவரோடு கூட இருக்க வேண்டும் என்று அவரை வேண்டிக்கொண்டார். ஆனால் அவர் அதற்கு இசையாமல், அவரைப் பார்த்து, ”உமது வீட்டிற்குப் போய் ஆண்டவர் உம்மீது இரக்கங் கொண்டு உமக்குச் செய்ததையெல்லாம் உம் உறவினருக்கு அறிவியும்” என்றார். அவர் சென்று, இயேசு தமக்குச் செய்ததையெல்லாம் தெக்கப்பொலி நாட்டில் அறிவித்து வந்தார். அனைவரும் வியப்புற்றனர்.

**தியானம்:** இறைமகன் இயேசு இவ்வுலகிற்கு கொண்டு வந்தது முழு மனித விடுதலையையே. மனிதர்களாகிய நாம் சாத்தானின் பிடியில் வாழ்வதை இயேசு விரும்பவில்லை. இதை இன்றைய நற்செய்தி வாசகத்தில் மிகத் தெளிவாகப் பார்க்கின்றோம். அங்கே தீய ஆவி பிடித்திருந்த மனிதனை இயேசு விடுவிக்கின்றார். தீய ஆவிதான் எல்லாத் தீமைகளுக்கு காரணம் என்பதே இயேசுவின் காலத்து அறிவியல். எனவே இயேசு கொடுத்த அதிகாரம் எல்லாத் தீமைகளின் மீதும் என்பது தெளிவாகின்றது. இதனால்தான் தீய ஆவி கூட அவர் “கடவுளுக்கு அர்ப்பணமானவர்” என சான்று பகிர்கின்றன. அவர் கடவுளுக்கு எப்போதும் சொந்தமானவர் என்பது இதன் பொருள். ஆகவேதான் கடவுளிடம் நாம் கொண்டுள்ள நம்பிக்கை எம் உள்ளங்களில் பாறை போன்று உறுதியாக இருக்க வேண்டும். குறிப்பாக இன்றைய முதல் வாசகமும், திருப்பாடலும் நம்பிக்கையின் அவசியத்தை அறிவுறுத்தி நிற்கின்றன. ஆகவேதான் இறைமகன் இயேசுவின் உடனிருப்பை நாம் உணர்ந்த வாழும் பொழுது தீய ஆவியின் கட்டுக்களிலிருந்து நாம் விடுதலை பெற முடியும். இறைவனின் பிள்ளைகளாகிய நாம் அனைவரும் தீயோனுக்கும், அதன் செயல்பாடுகளுக்கும் இடங்கொடாமல் இறைவனின் தூய ஆலயங்களாக வாழ முடியும்.